நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை

பாரிஸ் கம்யூன்:
150 ஆண்டுகள்



மார்செல்லோ முஸ்ட்டோ

ஆங்கிலம் வழித் தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும்

எஸ்.வி.ராஜதுரை

NCBH

நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை

பாரிஸ் கம்யூன்: 150 ஆண்டுகள்

மார்செல்லோ முஸ்ட்டோ

ஆங்கிலம் வழித் தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும்:
எஸ்.வி. ராஜதுரை

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை- 600 050
☎: 044 - 26251968, 26258410, 48601884

Language : Tamil

Paris Commune: 150 Years

Author: **Marcello Musto**

Tamil Traslation and Footnotes: **S.V. Rajadurai**

First Edition: April, 2021

Copyright: Author

No.of Pages: 24

Publisher:

New Century Book House Pvt. Ltd.,

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email : info@ncbh.in

Online:www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 234 - -

Code No. A

₹

Branches

Ambattur (H.O.) 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027
Trichy 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371
Tirunelveli 0462-4210990, 2323990, **Madurai** 0452-2344106, 4374106
Dindigul 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
Salem 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387
Ooty 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
Pondicherry 0413-2280101 **Nagercoil** 04652-234990

பாரிஸ் கம்யூன்: 150 ஆண்டுகள்

ஆசிரியர்: **மார்செல்லோ முஸ்ட்டோ**

ஆங்கிலம் வழித் தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும்: **எஸ்.வி. ராஜதுரை**

முதல் பதிப்பு : ஏப்ரல், 2021

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

முன்னுரை

சென்ற ஆண்டு கொரோனா தொற்றின் முதல் அலை உலக நாடுகளில் பெருமளவில் மனித, பொருள் வகை இழப்புகளை ஏற்படுத்தியதைவிடப் பன்மடங்கு அதன் இரண்டாம் அலை சுனாமி போல மனித உயிர்களுக்கும் அவர்களின் வாழ்வாதாரங்களுக்கும் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மனிதகுலத்திற்கு இயற்கை தரும் ஆக்கபூர்வமான கொடைகள், பேரழிவை உண்டாக்கும் கூறுகள் ஆகியவற்றைக் கையாள்வதில் அறிவியல் வரலாற்றில் முக்கியப் பங்கு வகித்து வந்துள்ளது என்றாலும், தீர்மானகரமான பாத்திரம் குறிப்பிட்ட வகை சமூக அமைப்புகளுக்கே உள்ளது. கோவிட்-19, அதன் பல்வேறு 'அவதாரங்கள்' ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் இன்று உலகம் திணறிக் கொண்டிருப்பதற்குக் காரணமாக இருப்பவை, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் முதலாளித்துவ அமைப்புகளும் இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள பிணந்தின்னி ஆளும் வர்க்கங்களுமே. உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் ஒருங்கிணைந்து சர்வதேச உனர்வுடன் முதலாளிய அமைப்புக்கு எதிராகப் போராடாவிட்டால், கொரோனா போன்ற கொள்ளை நோய்கள் மனித குலத்தை இடைவிடாது சீரழித்தே வந்து கொண்டிருக்கும்.

சர்வதேச உணர்வுக்கு உலகின் முதல் எடுத்துக்காட்டாக இருந்தது 1871இல் சில வாரங்களே நீடித்திருந்த பாரிஸ் கம்யூனாகும். அதன் 150ஆம் ஆண்டு நிறைவையொட்டி மார்க்ஸிய அறிஞரும் ஆய்வாளருமான மார்செல்லோ முஸ்ட்டோவின் விருப்பத்திற்கேற்ப அவர் எழுதிய சிறு கட்டுரையை தமிழாக்கம் செய்ததுடன், தேவையான அடிக்குறிப்பு களையும் எழுதியுள்ளேன். இந்த மொழியாக்கத்தில் திருத்தங்கள் செய்து செழுமைப்படுத்திய தோழர் வ.கீதா; பிரெஞ்சுச் சொற்களின் தமிழ் உச்சரிப்புகளை வழங்கிய தோழர் கண்ணன் எம்., என் எழுத்துப் பணிகளை எப்போதும் ஊக்குவித்துவரும் சகு; இந்த மொழியாக்கத்தை மிக விரைவாக கணினி அச்சு செய்து கொடுத்த தோழர் தி.விக்னேஷ்; அட்டை வடிவமைப்பு செய்துள்ள தோழர் கா.குணசேகரன்; இதை சிறுநூலாக வெளியிட முன்வந்த என்.சி.பி.எச். மேலாண்மை இயக்குநர் தோழர் சண்முகம் சரவணன், பொது மேலாளர் தோழர் தி.ரெத்தினசபாபதி ஆகியோருக்கு என் நன்றி.

கோத்தகிரி
22.04.2021 (லெனின் பிறந்த நாள்) **எஸ்.வி.ராஜதுரை**

புரட்சியை நடத்தும் பொறுப்பைப் பாரிஸ் கம்யூன் தன் சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டபோது; சாமானிய உழைக்கும் மனிதர்கள் தங்களுக்கு "இயற்கையிலேயே மேலானவர்கள்" என்று சொல்லப் பட்டவர்களின் அரசாங்க சிறப்புரிமைகளை முதல் முறையாக மீறத் துணிந்தபோது, முன்னுவமை இல்லாத கடினமான சூழ்நிலைமைகளில், ஒரு பெருநகரப் பள்ளிக்கூட நிர்வாகிகளின் செயலாளருக்குக் குறைந்தபட்சமாகத் தேவைப்படுவதில் ஐந்தில் ஒரு பங்கு ஊதியத்தையே தங்களுக்கான மிக அதிகபட்சமான ஊதியமாகப் பெற்று செயலாற்றிய போது, உழைப்பாளர் குடியரசின் சின்னமான செங்கொடி, ஹோட்டல் தெ வில்லில் பறந்து கொண்டிருப்பதைக் கண்டு பழைய உலகம் வெஞ்சின வலிப்புகளால் பதைபதைத்துக் கொண்டிருந்தது.

– கார்ல் மார்க்ஸ்

(பிரான்ஸில் உள்நாட்டுப் போர் பற்றி சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் மே, 1871இல் ஆற்றிய மூன்றாவது உரையிலிருந்து)

அரசை நடத்துவதற்கான சாதனங்களைத் தேர்ந்தெடுப்பதில் அந்த சாதனங்களில் குறிப்பிட்ட வகுப்புக்கு ஆதரவான ஒரு சார்பான அம்சங்கள் இடம் பெறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. உண்மையில் இது ஒரு நல்லாட்சிக்கு வலுவான அஸ்திவாரமாகும். ஆனால் இதன் முக்கியத்துவத்தை ஜனநாயகத்தின் தீவிர ஆதரவாளர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர்கூட பொதுவாக உணராதது துரதிஷ்ட வசமானதாகும். கார்ல் மார்க்ஸ்தான் இதனை முதலில் உணர்ந்தவர்; பாரிஸ் கம்யூனின் நிர்வாகத்தில் இதனைக் கணக்கிலெடுத்துக் கொண்டார். அடிமட்ட வகுப்பினர் முன்வைத்துள்ள இட ஒதுக்கீட்டுக் கோரிக்கை டி சே சுட்டிக்காட்டிய, கார்ல் மார்க்ஸ் பரிந்துரைத்த, ரஷ்யாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அடிமட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் அந்த வகுப்பின் நலன்களைப் பாதுகாக்க முடியும்.

- பாபாசாகேப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

('திரு.காந்தியும் தீண்டப்படாதோரின் விடுதலையும்' நூலிலிருந்து)

பாரிஸ் கம்யூன்: 150 ஆண்டுகள்

பிரெஞ்சு பூர்ஷ்வாக்களுக்கு எப்போதுமே எல்லாமே கைகூடி வந்துள்ளன. 1789ஆம் ஆண்டுப் புரட்சி தொட்டு, நாட்டில் சுபிட்சம் ஏற்பட்டிருந்த காலகட்டங்களில் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவர் களாக இருந்தவர்கள் அவர்கள் மட்டுமே; பாட்டாளி வர்க்கமோ எப்போதுமே நெருக்கடிகள் ஏற்படுத்தி வந்த அதிர்ச்சிகளை தாங்கிக் கொண்டே வந்திருந்தது. ஆனால் 'மூன்றாம் குடியரசு'[1], தொழிலாளி வர்க்கம் செயலாற்றுவதற்கான புதிய திசைமார்க்கங்களைத் திறந்துவிட்டதுடன், அவ்வர்க்கம் புதிய வழியில் பயணிப்பதற்கான ஒரு மாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்பையும் தோற்றுவித்தது. செடானில் நடந்த சண்டையில் தோற்கடிக்கப்பட்ட மூன்றாம் நெப்போலியன், 1870 ஆம் ஆண்டு செப்டம்பர் 4இல் பிரஷ்யர்களால் சிறைப் பிடிக்கப் பட்டான். அடுத்த ஆண்டு ஜனவரியில், பாரிஸ் நகரை நான்கு மாதகாலம் முற்றுகையிட்டிருந்த பிறகு, ஓட்டோ ஃபான் பிஸ்மார்க்,[2] பிரெஞ்சு

---

[1] **மூன்றாம் குடியரசு** (Third Republic): 1789ஆம் ஆண்டு தொடங்கி 1792ஆம் ஆண்டு வரை நடந்த பிரெஞ்சுப் பூர்ஷ்வாப் புரட்சியின்போது1792 செப்டம்பர் 22இல் முடியாட்சி முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, முதல் பிரெஞ்சுக் குடியரசு உருவாக்கப் பட்டது; 1804ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய நெப்போலியன் போனபார்ட், குடியாட்சி முறையை ஒழித்துவிட்டு, தன்னைத்தானே பிரான்ஸின் முடிமன்னனாக அறிவித்து, பிரான்ஸை **'முதல் பேரரசாக'** அறிவித்தான்; 1848ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த வெகுமக்கள் கிளர்ச்சிக்குப் பிறகு **'இரண்டாம் குடியரசு'** உதயமாயிற்று. ஆனால் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவனும் நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகனுமாகிய லூயி நெப்போலியன் போனபார்ட், 1851ஆம் ஆண்டில் 'அரண்மனைப் புரட்சி'யின் மூலம் தன்னைத் தானே பிரான்ஸின் பேரரசனாக அறிவித்து, **'இரண்டாம் பேரரசை'** தோற்றுவித்தான். பிரெஞ்சுப் பேரரசை விரிவுபடுத்தும் பொருட்டு அவனது அரசாங்கம் பிரஷ்யா முதலிய நாடுகளுடன் போரில் ஈடுபட்டது. பிரஷ்ய இராணுவத்தால் பிரெஞ்சு இராணுவம் தோற்கடிக்கப் பட்டு, பிரான்ஸின் வட கிழக்குப் பகுதியில் நடந்த சண்டையில் மூன்றாம் நெப்போலியன் பிரஷ்யத் துருப்புகளால் கைது செய்யப்பட்ட பிறகு, முடியாட்சி முறையை விரும்பிய பிரெஞ்சு பூர்ஷ்வா வர்க்கத்தால் **'மூன்றாம் குடியரசு'** தோற்றுவிக்கப்பட்டது.

[2] **ஓட்டோ ஃபான் பிஸ்மார்க்** (Otto Van Bismarck-1815-1898)**:** பிரஷ்ய நாட்டையும் ஜெர்மன் மொழி பேசப்படும் இதர நிலப் பகுதிகளையும் (ஆஸ்திரியா தவிர) ஒன்றிணைத்து ஐக்கிய ஜெர்மானியப் பேரரசை உருவாக்குவதில் முதன்மைப் →

அரசாங்கத்தின் சரணாகதியைப் பெற்றதுடன், அதன் விளைவாக ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கடுமையான நிபந்தனைகளையும் விதித்தார். பிரெஞ்சு தேசியத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, லெஜிடிமிஸ்ட், ஆர்லியனிஸ்ட் சக்திகளுக்கு இருந்த பெரும்பான்மை பலத்தின் உதவியுடன் அதால்ஃப் தியெர் (Adolphe Thiers) நிர்வாக இயந்திரத்தின் தலைவராக அமர்த்தப்பட்டார்.[3] ஆனால், நாட்டின் இதர பகுதிகளில் காணப்பட்டதைவிட தலைநகர் பாரிஸில்தான் மக்களின் அதிருப்தி அதிகமாக இருந்தது. அதன் காரணமாக, தீவிரக் குடியரசுவாத, சோசலிச சக்திகள் தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்துக்கான தேர்தலில் பெரும் வெற்றி பெற்றனர். சமூக அநீதிகளை அப்படியே தக்கவைத்துக் கொண்டு, போர்ச்சுமைகளை மிகவும் வசதி குறைந்தவர்கள் மீது ஏற்றி, நகரை நிராயுதபாணியாக்கக்கூடிய ஒரு வலதுசாரி அரசாங்கம் அமைவதற்காகச் செய்யப்பட்டு வந்த ஓர் ஏற்பாடு, மார்ச் 18 அன்று ஒரு புதிய புரட்சியைத் தூண்டிவிட்டது. தியெருக்கும் அவரது இராணுவத்திற்கும் பாரிஸ் நகரிலிருந்து வெர்ஸேய் நகருக்கு ஓடிப் போவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று.[4]

← பாத்திரம் வகித்த அரசியல் வல்லுநர்; ஜெர்மன் பேரரசின் அதிபராகவும் (சான்செலர்) இருந்தவர்.

[3] தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்தின் (Government of National Defence) தலைவர்.

[4] மூன்றாம் நெப்போலியன் சிறைபிடிக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, அதாவது 1870 செப்டம்பர் 4இல், இரண்டாவது பிரெஞ்சுப் பேரரசைக் கலைத்து பிரான்ஸைக் குடியரசு நாடாக அறிவிப்பதில் பாரிஸ் நகரப் பாட்டாளிவர்க்கம் முதன்மைப் பாத்திரம் வகித்த போதிலும் அரசியல் அதிகாரம் பூர்ஷ்வா வர்க்கத்திடம் சேர்ந்துவிட்டது. பாரிஸ் நகர பூர்ஷ்வா வர்க்கம், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் பொருட்டு எத்தகைய பிற்போக்குச் சக்திகளிடமும் கூட்டுச் சேரத் தயாராக இருந்தது. மறுபுறம், மூன்றாம் நெப்போலியனின் ஆட்சியின் கீழ் இருந்த நாடாளுமன்றத்தில் பாரிஸ் நகரப் பிரதிநிதிகளாக இருந்தவர்கள், தொடர்ந்து பிரஷ்ய இராணுவத்தின் முற்றுகையின் கீழ் இருந்த பாரிஸைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு அரசாங்கத்தை உருவாக்க ஒப்புதல் தந்தனர். இராணுவம் போன்ற அமைப்பான 'தேசியக் காவலர்கள் படை'யில் (National Guards) ஆயுதம் ஏந்தும் ஆற்றலுள்ள அனைவரும் சேரலாம் என்று அறிவித்தனர். பாரிஸ் நகர மக்களில் மிகப் பெரும்பாலானோர் உழைக்கும் மக்களாதலால், அந்தப் படையில் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் அவர்களாகத்தான் இருந்தனர். எனவே, ஆயுதமேந்திய தொழிலாளர்களுக்கும் புதிதாக உருவாக்கப்பட்ட பூர்ஷ்வா அரசாங்கத்துக்குமிடையே பகிரங்கமான மோதல் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகியது. தோல்வியைத் தழுவும் நிலைக்குத் தள்ளப்பட்ட பூர்ஷ்வா வர்க்கம், பிரஷ்ய இராணுவம் பிரான்ஸுடன் நடத்தி வந்த போருக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, 'சட்டம் ஒழுங்கை' நிலைநாட்டப் பிரஷ்யத் துருப்புகள் தனக்கு உதவ வேண்டும் என விரும்பியது. ஆக, பூர்ஷ்வா வர்க்கம் உருவாக்கிய 'தேசியப் பாதுகாப்புக்கான அரசாங்கம்' 1871 ஜனவரி 28 அன்று பிரஷ்யர்களிடம் சரணடைந்ததுடன் பாரிஸ் நகரையும் அவர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்தது. ஆனால், பாட்டாளி வர்க்கம் →

போராட்டமும் அரசாங்கமும்

ஜனநாயகரீதியான ஒப்புதலைப் பெறுவதற்காகக் கிளர்ச்சியாளர்கள் உடனடியாக ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்தத் தீர்மானித்தனர்.[5] மார்ச் 26 அன்று பாரிஸ் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் (190,000 பேர் ஆதரவாகவும் 40,000 பேர் எதிராகவும்), கிளர்ச்சிக்கான நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தனர்; தேர்ந்தெடுக்கப்பட்ட 85 பிரதிநிதிகளில் 70 பேர் புரட்சிக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். பாரிஸ் நகரின் சில

← ஆயுதமேந்தியிருந்ததால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை. ஆயுதமேந்திய பாரிஸ் தொழிலாளர்களை சமாளிப்பது லூயி போனபார்ட்டின் இராணுவத்தைத் தோற்கடித்ததைவிட மிகக் கடினமானது என்பதை உணர்ந்த பிரஷ்யர்கள், 'தேசியக் காவலர் படைகளு'டன் தனியாக ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அவர்கள் வசம் பாரிஸ் நகரத்தின் சிறு பகுதி மட்டுமே-இரண்டு பூங்காக்கள் மட்டுமே-விட்டுவைக்கப்பட்டது; அதுவும் சில நாட்களுக்குத்தான். பிரெஞ்சு பூர்ஷ்வா வர்க்கம், பாரிஸ் நகரத் தொழிலாளிகளின் செல்வாக்கை ஒழிப்பதற்காகப் போட்டி அதிகார மையமொன்றை உருவாக்க முடிவு செய்து, வெர்ஸேய் நகரைக் கைப்பற்றி, 1789ஆம் ஆண்டுப் பிரெஞ்சுப் புரட்சியால் தூக்கியெறியப்பட்ட பதினான்காம் லூயி மன்னனும் பிற பிரெஞ்சு அரசர்களும் ஆட்சி புரிந்து வந்த கோட்டைக்கு பிரெஞ்சு நாடாளுமன்றத்தைக் கொண்டு சென்று, அதில் மாற்றங்கள் செய்தது. பூர்ஷ்வா வர்க்கத்தின் அந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கிய அதால்ஃப் தியெர் (Adolphe Thiers), பிரெஞ்சு முடியாட்சியை ஆதரித்த பூர்ஷ்வாக்களின் ஆர்லியனிஸ்ட் பிரிவின் தலைவராவார். அவரை ஆதரித்த 'லெஜிடிமிஸ்டுகள்' என்பவர்களும்கூட முடியாட்சி முறையை விரும்பியவர்கள்தான். பாரிஸ் நகரத் தொழிலாளிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்ட 'தேசியக் காவலர் படை'யை நிராயுதபாணியாக்குவதுதான் வெர்ஸேயிலிருந்த பூர்ஷ்வா அரசாங்கத்தின் முதல் நடவடிக்கை. பாரிஸ் நகரிலுள்ள மோன்மோர்த்ரெ என்னுமிடத்தில் தேசியக் காவலர்கள் வைத்திருந்த பீரங்கியைத் திருடிக்கொண்டு வருமாறு தியெர் தனது படை வீரர்களை அனுப்பினார். ஆனால், பாரிஸ் நகர வெகுமக்கள், தேசியக் காவலர் படையினர், பூர்ஷ்வா அரசாங்கத்தின் இராணுவத்திலிருந்து வெளியேறி பாரிஸ் தேசிய காவலர்களுடன் சேர்ந்துகொண்ட படைவீரர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியால் தியெரின் திட்டம் தகர்க்கப்பட்டது. தியெர் அனுப்பிய படைவீரர்களை முற்றுகையிட்டவர்களில் முன்னணியில் நின்றவர்கள் பெண்கள். அந்தப் படைவீரர்களுக்குத் தலைமை தாங்கிய லெகோம்தெ, க்ளெமெண்ட் தாமஸ் ஆகியோர் புரட்சிகரத் தொழிலாளிகளால் உடனடியாகச் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதுபோன்று,பாரிஸ் நகரத் தொழிலாளிகள் சிறிதும் தயக்கம் காட்டாமல் எதிரிகளை ஒழித்துக்கட்டிய நிகழ்ச்சிகள் மிக அரிதாகவே நடந்தன. அதற்கு மாறாக, தியெரின் படைவீரர்களோ ஆயுதமேந்தியவர்கள், ஆயுதமேந்தாதவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என கண்ணில் பட்டவர்களையெல்லாம் கொன்று தீர்த்தனர். (History of the Paris Commune of 1871, Translated from the French by Eleanor Marx, *https://www.marxists.org/history/france/archive/lissagaray/index.html;* John Merriman, *Massacre: The Life and Death of the Paris Commune,* Yale University Press, 2014.)

[5] பாரிஸ் பெருநகர மன்றத் தேர்தலை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டவர்கள் தேசியக் காவல் படையினர்.

மாவட்டங்களின்[6] முன்னாள் தலைவர்களாக இருந்தவர்களைக் கொண்டிருந்த கட்சியைச் சேர்ந்த மிதவாதப் பிரதிநிதிகள், உடனடியாகத் தங்கள் பதவிகளிலிருந்து விலகியதுடன் கம்யூன் அவையில் (Commune Council) பங்கேற்கவுமில்லை. மிக விரைவில் அவர்களுடன் நான்கு தீவிரவாதிகளும் சேர்ந்து கொண்டனர். எஞ்சிய 66 உறுப்பினர்களும்கூட, அவர்களது இரட்டை அரசியல் விசுவாசங்களின் காரணமாக ஒருவரிட மிருந்து மற்றவரை எப்போதுமே எளிதில் பாகுபடுத்திப் பார்க்க முடியாத வகையில் வெவ்வேறு வகையான அரசியல் நிலைப்பாடு களைப் பிரதிநிதித்துவம் செய்தவர்களாக இருந்தனர். அவர்களில், புகழ்பெற்ற சார்ல் தெல்குளூஸ் (Charles Delescluze), ஃபெலிக்ஸ் பியா (Félix Pyat) ஆகியோர் உட்பட ஏறத்தாழ இருபது பேர் நவ-ஜேகோபினிசக் குடியரசுவாதிகள்[7] ஆவர்; 12 பேர் ஓகுஸ்த் ப்ளாங்கியைப்[8] பின்பற்றிய வர்கள்; 17 பேர் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள்

---

[6] **மாவட்டங்கள் (arrondissements):** அச்சமயம் பாரிஸ் நகரம் பல நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அவை' arrondissements' என அழைக்கப்பட்டன (ஆங்கிலத்தில் districts) பிரிக்கப்பட்டிருந்தது. அந்த மாவட்டங்கள்தான் தேர்தல் தொகுதிகள். அப்போது ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனி 'மேயர்கள்' இருந்தனர்.

[7] **நவ-ஜேகோபினியர்கள் (Neo-Jacobins):** பாரிஸிலும் பிற பிரெஞ்சு நகரங்களிலும் 1789-1790ஆம் ஆண்டுகளில் ஏராளமான புரட்சிகர மன்றங்கள் (Revolutionary Clubs) தோன்றின. அந்த மன்றங்கள்தாம் அரசியல் கட்சிகள் வகிக்கப் போகும் பாத்திரங் களைத் தீர்மானித்தன. அவற்றில் செல்வாக்கு மிகுந்த மன்றங்களிலொன்றாகத் திகழ்ந்தது ஜேகோபின் மன்றம் (Jacobin Club) ஆகும். புனித ஜேகோபின் கான்வென்டில் அந்த மன்றம் இயங்கியதால் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று. பிரெஞ்சு நாடெங்கிலும் அதற்கு நூற்றுக்கணக்கான கிளைகள் தோன்றின. அந்த மன்றத்தில் தொடக்கத்தில் முதன்மைப் பாத்திரம் வகித்தவர்கள் அரசியல் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்த முடியாட்சி முறையை ஆதரித்த மிராபோ (Mirabeu), பார்னவ் (Barnave) போன்றவர்கள். பின்னர் அறிவொளிச் சிந்தனையாளர் ரூஸ்ஸோவை வழிகாட்டியாகக் கொண்டிருந்த மாக்ஸ்மிலியன் ரோப்பஸ்பியரின் (Maxmillian Robespeare) பூர்ஷ்வா ஜனநாயகப் போக்கு அந்த மன்றங்களில் மேலோங்கத் தொடங்கியது. இந்தப் போக்கைப் பின்பற்றியவர்கள்தாம் பொதுவாக 'ஜேகோபின்கள்' என்றழைக்கப் பட்டனர். 1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியில் முக்கியப் பாத்திரம் வகித்த இவர்களுக்கும் மிதவாதப் போக்கு கொண்ட பிற பிரிவினருக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றியதாலும், வெளிநாட்டுப் படையெடுப்புகளின் அச்சுறுத்தல்களின் காரணமாகவும் ரோப்பஸ்பியரின் தலைமையில் இருந்த ஜேகோபின்கள் அதிகாரத்தைத் தங்கள் கையில் குவித்துக் கொண்டு புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருந்தவர்களை ஒழித்துக் கட்டும் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இவர்களது மரபைச் சேர்ந்தவர்களே நவ-ஜேகோபின்கள்.

[8] **ஓகுஸ்த் ப்ளாங்கி (August Blanqui-1805-1891):** பிரெஞ்சு சோசலிசவாதியும் போராளியுமாவார். புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதில் அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அர்ப்பணிப்பு மிக்க சிறு புரட்சியாளர் குழு நடத்தும் இரகசியமான, ஆயுதமேந்திய புரட்சியின் மூலம் →

(அடிக்கடி ஒன்றுக்கொன்று முரண்பட்டு வந்த, இரு குழுக்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள்; ஒரு குழுவினர் பியர் ஜோசஃப் புருதோனின் (Pierre-Joseph Proudhon) பரஸ்பரவாத ஆதரவாளர்கள்;[9] மற்றொரு குழுவினர் கார்ல் மார்க்ஸுடன் இணைந்திருந்த சமூகவுடைமைவாதிகள்; இருவர் எந்தக் குழுவிலோ கட்சியிலோ சேராத சுயேச்சையாளர்கள்.) கம்யூனின் தலைவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகவோ உழைக்கும் வர்க்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாகவோ இருந்தனர்; 14 பேர் தேசியக் காவலர்படையைச் சேர்ந்தவர்கள். உண்மையில், தேசியக் காவலர் படையின் மத்தியக் குழுதான் கம்யூனுக்கு அதிகாரம் வழங்கியிருந்தது. இந்த விஷயம்தான் தேசியக் காவலர் படை, கம்யூன் ஆகிய இரு அமைப்புகளிடையே நிலவிய நீண்ட, தொடர்ச்சியான கருத்து வேறுபாடுகளுக்கும் முரண்பாடுகளுக்குமான முன்னோட்டமாக அமைந்திருந்தது.

பாரிஸ் கம்யூன் என்று அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டு வந்த புதிய கம்யூன் அவையைக் கொண்டாடுவதற்காக ஹோட்டல் தெ வில் என்னுமிடத்திற்கருகே மார்ச் 28 அன்று ஏராளமான குடிமக்கள் கூடினர்.

← அதிகாரத்தைக் கைப்பற்றி பலவந்தத்தின் மூலம் செல்வத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கருதியவர். பாரிஸ் கம்யூன் புரட்சியின் போது அவர் பூர்ஷ்வா அரசாங்கத்தால் சிறையிலடைக்கப்பட்டிருந்தார் என்றாலும் கம்யூனின் தலைவராக அவர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனின் வீழ்ச்சிக்குப் பிறகே அவர் விடுதலை செய்யப்பட்டார்.

[9] **பரஸ்பரவாதிகள்:** தொழிலாளர்கள், சொந்த உற்பத்தி சாதனங்களை வாங்கிச் சேகரித்துக் கைவினைஞர்கள் ஆவதற்கு இலவசக் கடன் வழங்கும் 'மக்கள் வங்கிகள்' உருவாக்கப்பட வேண்டும், இந்தக் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்கவும் விற்கவும் 'பரிவர்த்தனை வங்கிகள்' உருவாக்கப்பட வேண்டும் என்றும் புரூதோன் ஒரு கற்பனைத் திட்டம் வகுத்தார். அவரது திட்டத்தின்படி, இந்த வங்கிகள் மூலம் உழைப்பாளிகள் (கைவினைஞர்கள்) தங்கள் உற்பத்திப் பொருட்களை 'நியாய விலைக்கு' விற்கவும் வாங்கவும் செய்வார்கள்; இவ்வறு உழைப்பாளிகளும் (கைவினைஞர்களும்) 'பரிவர்த்தனை வங்கிக'ளும் பரஸ்பரம் உதவி செய்து கொள்வர். அதேவேளை முதலாளித்துவ உடைமையில் உள்ள உற்பத்திக் கருவிகளும் சாதனங்களும் அப்படியே விட்டுவைக்கப்பட்டிருக்கும்! பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு என்னும் அமைப்பே இருக்கக்கூடாது என்று கூறிய அவர், தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்துத் தங்கள் கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடுவதை எதிர்த்தார். புரூதோனின் தத்துவத்தை விமர்சித்து தத்துவத்தின் வறுமை (The Poverty of Philosophy) என்னும் நூலை மார்க்ஸ் எழுதினார்.

சமூகவுடைமைவாதிகள்: அனைத்து சொத்துகளும் சமூகவுடைமையாக்கப்பட வேண்டும், பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள்.

பாரிஸ் கம்யூன் 72 நாட்களே நீடித்திருந்தது என்றாலும், பல மாதங்களாக இருந்த வந்த இன்னல்களால் சோர்வுற்றிருந்த மக்களிடையே நம்பிக்கையை மீண்டும் தூண்டிவிடுவதாகவும், பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொழிலாளர் இயக்க வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாகவும் அமைந்திருந்தது அதுதான். பாரிஸ் கம்யூனை ஆதரித்த மக்கள் வாழும் பகுதிகளில் அதற்கு உதவி புரியும் பொருட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட குழுக்களும் பிற குழுக்களும் உதித்தெழுந்தன. பாரிஸ் பெரு நகரத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கம்யூனுடன் ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கின்ற, ஒரு புதிய உலகைக் கட்டமைக்கத் திட்டமிடுகின்ற முன்முயற்சிகள் தோன்றின. அந்த நகரத்தின் மோன்மார்த்ரெ (Montmartre) பகுதி, 'தன்னுரிமையின் கோட்டை' என்று அழைக்கப்படலாயிற்று. அனைத்தையும் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. லூயி மிஷெல்[10] போன்ற போராளிகள் மற்றவர்களின் நலன்களுக்காகத் தன் நலன்களைத் தியாகம் செய்து கொள்தல் என்னும் உணர்வுக்கு சீரிய எடுத்துக்காட்டாக இருந்தனர். "மகத்தான, கட்டுக்குள் அடக்க இயலாத ஆன்மாக்க"ளைப் போல "நசுக்கப்பட்டவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் போற்றியவர்" என்று லூஸி மிஷெலை விக்டர் ஹ்யூகோ[11] பாராட்டியுள்ளார்.

ஆனால் கம்யூனுக்கு உயிர் கொடுத்தது தனிப்பட்ட தலைவரொருவரின் தூண்டுதலோ அல்லது கவர்ச்சிகரமான ஒரு சில மனிதர்களோ அல்லர்; கூட்டுச் செயல்பாடு என்ற பரிமாணம்தான் அதன் அடையாள முத்திரை. விடுதலை என்ற பொது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஆண்களும் பெண்களும் தாமாகவே ஒன்றாக முன் வந்தனர்.

---

[10] **லூஸி மிஷெல் (Louise Michel-1830-1905):** பாரிஸ் நகரில் பள்ளி ஆசிரியராக இருந்த அவர், கம்யூன் மேற்கொண்ட புரட்சிகர நடவடிக்கைகளில் பங்கேற்றார். 'சிவப்புக் கன்னி' (Red Virgin) என்றழைக்கப்பட்ட அவர், கம்யூனின் வீழ்ச்சிக்குப் பிறகு நியூ காடலோனியா தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். தண்டனை முடிந்து பிரான்ஸுக்குத் திரும்பி வருகையில் அவர் ஆட்சி மறுப்பியராக (Anarchist) மாறியிருந்தார்.

[11] **விக்டர் ஹ்யூகோ (Victor Hugo:1902-1885):** பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர். அவருடைய நாவல்களில் சில பல்வேறு மொழிகளில் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. *Les Miserables* என்ற நாவலின் கதையைத் தழுவி 1950ஆம் ஆண்டில் 'ஏழை படும் பாடு' என்ற தமிழ்த் திரைப்படம் வெளிவந்தது.

சுய-அரசாங்கம் என்பது ஒரு கற்பனா உலகமாகப் பார்க்கப்படவில்லை. சுய விடுதலை என்பது ஓர் இன்றியமையாக் கடமையாகக் கருதப்பட்டது.

அரசியல் அதிகாரத்தின் உருமாற்றம்

வறுமை பரவலாகுவதைத் தடுக்கும் பொருட்டு இரண்டு அவசரகால ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன: ஒன்று வாடகைக் கட்டணம் உயர்த்தப்படுவதைத் தடை செய்யும் ஆணை ("சொத்து தன் பங்கிற்கான தியாகங்களைச் செய்ய வேண்டும்" என்று கூறப்பட்டது.); இன்னொன்று, அடகுக்கடைகளில் 20 பிராங்குகளுக்குக் குறைந்த மதிப்புடைய பொருட்களை விற்பதைத் தடை செய்யும் ஆணை. போர், நிதி, பொதுப் பாதுகாப்பு, கல்வி, உயிர் வாழ்வு, உழைப்பு, வணிகம், வெளியுறவு, பொது சேவை ஆகியவற்றுக்கான அமைச்சகங்களுக்குப் பதிலாக, முடிவுகளை எடுப்பதில் சம உரிமையுடைய உறுப்பினர்களைக் கொண்ட ஒன்பது குழுக்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டது. சில நாட்கள் கழித்து, இந்தத் துறை ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதி தலைமை தாங்கும்படி செய்யப்பட்டார்.

கம்யூன் உறுப்பினர் பதவிகளில் கிட்டத்தட்ட உடனடியாகக் காலியான 31 இடங்களை நிரப்புவதற்கான தேர்தல் நடந்து மூன்று நாட்களுக்குப் பிறகு, அதாவது ஏப்ரல் 19இல் 'பிரெஞ்சு மக்களுக்கான பிரகடனம்' கம்யூனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தப் பிரகடனம், "தனிநபரின் தன்னுரிமை, மனசாட்சிப்படி நடக்கும் சுதந்திரம், உழைப்புச் சுதந்திரம்" ஆகியவற்றுக்கும் "கம்யூன் விவகாரங்களில் குடிமக்கள் நிரந்தரமாகத் தலையிடுவதற்குமான முழுமுற்றான உத்தரவாதத்தை"யும் உள்ளடக்கியிருந்தது. பாரிஸ் கம்யூனுக்கும் வெர்ஸேயிலிருந்த பிரெஞ்சு அரசாங்கத்துக்குமிடையிலான முரண்பாடுகளை "பொய்த்தோற்றங்களால் ஏமாற்றுகிற சமரசங்கள் மூலம் முடிவுக்குக் கொண்டு வர முடியாது" என்று கம்யூன் உறுதிபடத் தெரிவித்தது. "சண்டை புரியவும் வெற்றியடையவும் மக்களுக்கு உரிமையும் கடமையும் உள்ளது" என்றும் அது கூறியது. கம்யூனார்டுகளிடம்[12] இருந்த பல்வேறு அரசியல் போக்குகளிடையே மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் அப்போக்குகளின் கூட்டிணைவாக இருந்த காரணத்தால் சற்று தெளிவற்றதாக இருந்த இந்தப் பிரகடனத்தைவிட முக்கியமானதாக இருந்தவை, அரசியல் அதிகாரத்தை முற்றிலும் மாற்றி அமைப்பதற்காக கம்யூனார்டுகள் மேற்கொண்ட திட்டவட்டமான நடவடிக்கைகளாகும்.

---

[12] **கம்யூனார்டுகள்:** கம்யூன் அவையின் உறுப்பினர்கள், தேசியப் பாதுகாப்புப் படையினர், கம்யூனின் ஆதரவாளர்கள் ஆகிய எல்லோருமே 'கம்யூனார்டுகள்' என அழைக்கப்பட்டனர்.

அரசியல் நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கான வழிமுறைகளை மட்டுமல்லாது அதன் தன்மையையுமே கையாளக்கூடிய சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி களைத் திரும்பப் பெறுவதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்தும் ஆணைகள் வழியாக அவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குமான விதிகள் செய்யப்பட்டன (இவை அரசியல் பிரதிநிதித்துவம் என்ற சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை என்ற போதிலும்). நிரந்தரமான கட்டுப்பாட்டுக்கும் திரும்ப அழைத்துக் கொள்ளப்படும் சாத்தியப்பாட்டுக்கும் உட்பட்ட நீதிமன்றங்கள், இதர அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றுக்கான பதவிகள் கடந்தகாலத்தைப் போல தன்னிச்சையாக வழங்கப்படவில்லை. மாறாக, வெளிப்படையான போட்டி அல்லது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவையாக ஆக்கப்பட்டன. இதன் தெளிவான நோக்கம் என்னவென்றால், பொது வெளி என்பது அரசியலையே தொழிலாகக் கொண்டவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டுவிடுவதைத் தடுப்பதுதான். கொள்கை முடிவுகளை நிர்வாகிகளோ தொழில்நுட்ப வல்லுனர்களோ எடுப்பதற்குப் பதில் மக்கள் அனைவரும் சேர்ந்து எடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இராணுவமும் காவல்துறையும் சமுதாயத்திலிருந்து தனித்து நிற்கிற நிறுவனங்களாக இருக்கும் நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசிலிருந்து மத நிறுவனம் (திருச்சபை) பிரிக்கப்படுவது முற்றிலும் அவசியமான தாக்கப்பட்டது.

அரசியல் மாற்றத்துக்கான கம்யூனின் தொலைநோக்குப் பார்வையின் விளைவாக இத்தகைய நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ளப்படவில்லை; அப்பார்வை அரசியலின் அடிவேர் வரை செல்வதாக இருந்தது. நிர்வாகத்துறையின் அதிகாரத்தை வெகுவாகக் குறைக்க மக்களுக்கு அதிகாரத்தை வழங்குதல் என்பது அவசியமான தானதாக அறியப்பட்டது. அரசியல் என்பது தனிச் சிறப்பான ஒரு செயல்பாடாக இனிமேல் இருக்காமல் சிவில் சமுதாயத்தின் நடைமுறையுடன் படிப்படியாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதற்காக - ஆன்றி தெ சேன் சிமோன்[13] ஏற்கெனவே கூறிவந்தது போல- அரசியல் வெளியைக் காட்டிலும் சமுதாய வெளிக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது ஏற்கப்பட்டது. இவ்வாறு,

---

[13] **ஆன்றி தெ சேன் சிமோன்** (Henri de Saint-Simon: 1760-1825): *18-19* ஆம் நூற்றாண்டு கற்பனாவாத சோசலிசச் சிந்தனையாளர். இவரைப் பற்றிய விவரங்களுக்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய 'கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்' நூலைக் காண்க.

அரசுக்குக் கையளிக்கப்பட்ட செயல்பாடுகளை சமுதாய அமைப்பு திருப்பி எடுத்துக் கொள்ளும். ஏற்கெனவே இருக்கின்ற வர்க்க ஆட்சியைத் தூக்கியெறிவது மட்டும் போதுமானதாக இருக்கவில்லை; பொதுவாகவே எந்தவொரு வர்க்க ஆட்சிக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இவையனைத்தும், செயல்பாட்டுக்கு வந்திருந்தால் குடியரசு என்பது அனைத்துக் கூறுகளின் விடுதலையை மேம்படுத்துகின்ற, சுதந்திரமான ஒன்றியமாக, உண்மையான ஜனநாயகக் கூட்டுறவு அமைப்பாக இருக்க வேண்டும் என்கிற கம்யூனின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றக்கூடியதாக இருந்திருக்கும். பொருளுற்பத்தியாளர்களின் சுய-அரசாங்கம் உருவாவதில் போய் முடிந்திருக்கும்.

சமூக சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்

அரசியல் மாற்றத்தைவிட சமூக சீர்திருத்தங்களே மேலும் முக்கியமானவை என்று கம்யூன் கருதியது. அவைதான் கம்யூனின் இருப்புக்கான காரணமாகவும், அது எந்தக் கோட்பாடுகளின் பொருட்டு நிறுவப்பட்டதோ அவற்றுக்கு அது விசுவாசமாக இருக்கிறதா என்பதை அளந்து பார்க்கும் கருவியாகவும், இதற்கு முன்பு 1789, 1848ஆம் ஆண்டுகளில் நடந்த புரட்சிகளிலிருந்து கம்யூன் புரட்சியை வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாகவும் அமைந்தன. தெளிவான வர்க்க உணர்வுடன் கம்யூன் ஒன்றுக்கும் மேற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடனைத் திருப்பித் தர வேண்டியதற்கான காலக்கெடு மூன்றாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் கூடுதலான வட்டி வசூலிக்கப்படக்கூடாது என்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. வாடகை செலுத்தாதவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுவது தடை செய்யப்பட்டது; தங்கள் தலைக்கு மேல் ஒரு கூரைகூட இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுவதற்காக காலியாக உள்ள கட்டடங்களை கம்யூன் எடுத்துக்கொள்வதற்கான ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

வேலை நேரத்தைக் குறைப்பதற்கான திட்டங்களும் இருந்தன (அப்போதிருந்த 10 மணி நேர வேலையை எதிர்காலத்தில் 9 மணி நேர வேலையாகக் குறைக்கும் திட்டங்கள்); தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கூலியைக் குறைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் வழக்கம் இருந்து வந்தது. அப்படி அபராதத்தை விதிப்பவர்கள் தண்டிக்கப்படுவர் என்ற அறிவிப்புடன் அபராதம் விதிக்கும் முறை சட்டவிரோதமாக்கப்பட்டது. கண்ணியமான கூலி என்று சொல்லத்தகும் அளவுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது. நகரத்துக்குத் தேவையான உணவு கூடுதலாகவும் குறைந்த விலையிலும் தருவிக்கப்பட

சாத்தியமானவை அனைத்தும் செய்யப்பட்டன. ரொட்டி தயாரிக்கும் வெதுப்பகங்களில் (பேக்கரிகள்) இரவு நேர வேலை தடை செய்யப் பட்டதுடன் ஏராளமான நகராட்சி இறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டன. மக்களில் பலகீனமான பிரிவினருக்கு சமூக உதவி விரிவுபடுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக கைவிடப்பட்ட குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் உணவுக் கூடங்கள் திறக்கப்பட்டன. முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும், 'கள்ளத்தனமாக' பிறந்த குழந்தைகளுக்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படுவதற்கு முடிவு கட்டுவதைப் பற்றிய விவாதங்கள் நடத்தப்பட்டன.

கல்வி என்பது தனிநபர் விடுதலைக்கும் எந்தவொரு காத்திரமான சமுதாய, அரசியல் மாற்றத்துக்கும் இன்றியமையாத அம்சமாகும் என்பதை கம்யூனார்டுகள் அனைவரும் உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். சிறுவர்கள், சிறுமிகள் இருபாலார்க்கும் ஒரே மாதிரியான இலவச, கட்டாயப் பள்ளிக் கல்வி வழங்கப்பட்டது; மதச் சாயம் பெற்ற கல்வி புகட்டுதலுக்குப் பதிலாக, பகுத்தறிவும் அறிவியலும் சார்ந்த மதச்சார்பற்ற கல்வி கொண்டுவரப்பட்டது. பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் தொடர்பான பல வலுவான விவாதங்கள், பெண்களின் கல்விக்காகவென்றே சிறப்பாக உருவாக்கப்பட்ட ஆணையங்களிலும், பத்திரிகைகளிலும் இடம் பெற்றன. கல்வி என்பது 'உண்மையான பொது சேவை'யாக ஆவதற்காக "இரு பாலாரையும் சேர்ந்த குழந்தை களுக்கு" கல்வி கற்க சமவாய்ப்பை வழங்க வேண்டியிருந்தது. மேலும், "மரபினம், தேசிய இனம், மதம் அல்லது சமூகத் தகுதி ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகள்" தடை செய்யப்பட்டன.

சோசலிசத்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளையும் கம்யூன் மேற்கொண்டது. சில உடைமையாளர்கள், தங்கள் தொழில்கூடங்களை விட்டுவிட்டு பாரிஸ் நகரத்திலிருந்து ஓடிப்போய்விட்டனர். அவர்கள் திரும்பி வருவார்களேயானால் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படும் என்ற உத்தரவாதங்களோடு, அந்தத் தொழில்கூடங்களை தொழிலாளர்களின் கூட்டுறவுச்சங்கங்களிடம் ஒப்படைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. நாடக அரங்குகளுக்கும் அருங்காட்சியகங்களுக்கும் கட்டணம் இல்லாமல் அனைவரும் செல்லும் பொருட்டு அவை கூட்டுடைமையாக்கப்பட்டு, அவை ஓவியரும் ஓய்வொழிச்சல் இல்லாத போராளியுமான கிஸ்தாவ் கூர்பெவின்[14] தலைமையிலிருந்த

---

[14] **கிஸ்தாவ் கூர்பெ** (Gustave Courbet-1819-1877): பிரான்ஸில் யதார்த்தபாணி ஓவிய மரபைப் பின்பற்றிய கூர்பெ ஒர் சோசலிஸ்ட். உழைக்கும் மக்களை பல ஓவியங்களுக்கான கருப்பொருளாகக் கொண்டிருந்தவர். கம்யூன் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்ததற்காக ஆறு மாத காலம் சிறை தண்டனை அனுபவித்த பின் ஸ்விட்ஸர்லாந்தில் அகதியாகக் குடியேறி இறக்கும் வரை அங்கேயே வாழ்ந்தார்.

'பாரிஸ் கலைஞர்களின் கூட்டமைப்'பின் நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஏறத்தாழ முன்னூறு சிற்பிகள், கட்டடக் கலைஞர்கள், வித்தோகிராபர்கள், ஓவியர்கள் (இவர்களில் எதுவார் மெனெவும்[15] ஒருவர்) இந்த அமைப்பில் பங்கேற்றனர். இதை எடுத்துக்காட்டாகக் கொண்டு நடிகர்கள், இசை நாடக உலகைச் சேர்ந்தவர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும் "கலைஞர்களின் கூட்டமைப்பு" உருவாக்கப்பட்டது.

பிரெஞ்சு -பிரஷ்யப் போரின் பாதிப்புகளால் இன்னும் தடுமாறிக் கொண்டிருந்த பாரிஸ் நகரத்தில்தான் மேற்சொன்ன நடவடிக்கைகளும் ஏற்பாடுகளும் வியக்கத்தகு குறுகிய காலமான 54 நாட்களில் மேற்கொள்ளப்பட்டன. மார்ச் 29ஆம் நாளிலிருந்து மே 21ஆம் நாள் வரையிலான காலகட்டத்தில் மட்டுமே, அதுவும் பெருமளவில் மனித ஆற்றலையும் நிதி ஆதாரங்களையும் செலவிட்டு வெர்சேயின் தாக்குதல்களுக்கு எதிரான வீரம் செறிந்த எதிர்ப்புப் போராட்டங்களுக் கிடையில், கம்யூனால் தனது வேலைகளைச் செய்ய முடிந்தது. பலவந்தத்தைப் பிரயோகிக்கும் சாதனங்கள் ஏதும் கம்யூனிடம் இல்லாத காரணத்தால், அதன் ஆணைகள் பல நகரத்தின் பரந்த பகுதிகளில் ஒரே சீராக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான குறிப்பிடத்தக்க உத்வேகத்தை அவை வெளிப்படுத்தியதுடன் சாத்தியமான மாற்றத்துக்கான வழியைச் சுட்டிக்காட்டின.

கூட்டுப் போராட்டமும் பெண்ணியப் போராட்டமும்

கம்யூனை, அதனுடைய சட்ட அவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டு மட்டும் மதிப்பிட்டுவிட முடியாது. அவற்றை உள்ளடக்கியும் கடந்தும் அது இயங்கியது. நகர்ப்புற வெளியை மாற்றியமைக்கும் ஆர்வத்தையும் கம்யூன் கொண்டிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டு, வெண்டோம் தூணை[16] இடித்துத் தரைமட்டமாக்க அது மேற்கொண்ட முடிவாகும். அந்தத் தூண் காட்டுமிராண்டித்தனத்தின் நினைவுச்சின்னமாகவும் போரின் வெறுக்கத்தக்க குறியீடாகவும் கருதப்பட்டது. வழிபாட்டுத் தலங்கள்

---

[15] **எதுவார் மெனெ (Edouard Manet-1832-1883):** ஓவியத்தில் நவீன கலை (Modern Art) என்று சொல்லப்படும் போக்கின் முன்னோடியாக இருந்த 'இம்ப்ரெஷனிஸ்ட்' ஓவியர்களில் தலைசிறந்தவர்.

[16] **வெண்டோம் தூண் (Vendome Column):** பாரிஸ் நகரின் முதல் மாவட்டத்திலுள்ள (arrondissement) வெண்டோம் சதுக்கத்தில், நெப்போலியன் போனபார்ட்டால், பிரெஞ்சு இராணுவம் அடைந்த போர் வெற்றிகளைப் போற்றுவதற்காக அமைக்கப் பட்ட தூண். அதை உருவாக்குவதற்கு பிரெஞ்சு இராணுவத்தால் தோற்கடிக்கப்பட்ட நாடுகளின் இராணுவங்களின் பீரங்கிகள் உடைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

சிலவற்றை மதச்சார்பற்றவையாக்கி சமூகத்தின் பயன்பாட்டுக்கு அவற்றை ஒப்படைத்தது இன்னொரு எடுத்துக்காட்டு. கம்யூனால் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்க முடிந்தது என்றால், அதற்குக் காரணம் அசாதாரணமான அளவில் வெகுமக்கள் பங்கேற்றதும் பரஸ்பரம் உதவி செய்து கொள்கின்ற உறுதியான உணர்வு அவர் களிடையே இருந்ததும் ஆகும். அதிகாரத்தை நிராகரிக்கும் இந்தப் போக்கின் வெளிப்பாடாக புரட்சிகர மன்றங்கள் (Clubs) பாரிஸ் நகரத்தின் மாவட்டங்கள் கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் உதித்தெழுந்து முக்கிய பங்காற்றியதைக் கொள்ளலாம். அத்தகைய மன்றங்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 28 ஆகும். அவை தன்னியல்பான அணிதிரட்டலுக்கான ஆகச்சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக விளங்கின. ஒவ்வொரு நாள் மாலையிலும் திறக்கப்பட்ட அந்த மன்றங்கள் வேலை நேரம் முடிந்ததும் குடிமக்கள் அங்கு கூடி சமுதாய, அரசியல் பிரச்சினைகளைப் பற்றித் தடையின்றி விவாதிக்கவும், தங்கள் பிரதிநிதிகள் சாதித்தவற்றை சரிபார்க்கவும், அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளை முன்வைக்கவும் வாய்ப்பை வழங்கின. மக்கள் சமமாக ஒருவருக்கொருவர் உறவு கொள்ளும் அமைப்புகளாக இருந்த அந்த மன்றங்கள், மக்களின் இறையாண்மையின் உருவாக்கத்தையும் அதன் வெளிப்பாட்டையும் ஆதரித்தன. தங்கள் சொந்த எதிர்காலத்தின் மீது தாங்களே செலுத்தும் கட்டுப்பாடு என்ற உவகை தரும் காற்றை சுதந்திரமாக சுவாசிக்கின்ற, சகோதரித்துவமும் சகோதரத்துவமும் நிலவும் உண்மையான இடங்களின் உருவாக்கமாக அமைந்தன.

விடுதலையை நோக்கிய இந்தப் பாதையில் தேசிய பாரபட்சங் களுக்கு இடம் இருக்கவில்லை. கம்யூனின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் கம்யூன் குடியுரிமை வழங்கியது. பிரெஞ்சு மக்களுக்கு வழங்கப்பட்ட அதே சமுக உரிமைகளை அயல்நாட்டவரும் அனுபவித்தனர். கம்யூனில் 3000 அயல்நாட்டவர் முக்கியப் பாத்திரம் வகித்தனர் என்பதே அது சமத்துவமாக செயல்பட்டதற்கான சான்றாக விளங்கியது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினராக இருந்த லியோ ஃப்ராங்கெல் (Leo Frankel) என்ற ஹங்கேரியர் கம்யூன் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அதிலிருந்த முக்கிய பதவிகளிலொன்றான தொழிலாளர் துறை "அமைச்சராக"வும் பணியாற்றினார். யாரோஸ்லா டோம்ப்ரோவ்ஸ்கி (Jaroslaw Dombrowski), வாலெரி விரோப்லெவ்ஸ்கி (Walery Wroblewski) ஆகிய இரு போலிஷ்காரர்கள் தேசியக் காவலர் படையின் தலைமைப் பீடத்தில் போற்றத்தக்க தளபதிகளாகப் பணியாற்றினர்.

வாக்களிக்கும் உரிமையையோ, கம்யூன் அவையில் உறுப்பியம் வகிக்கும் உரிமையையோ பெண்கள் இன்னும் பெறவில்லை என்றாலும் சமூக அமைப்பைப் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வை செய்வதில் இன்றியமையாப் பாத்திரம் வகித்தனர். பல சமயங்களில் அவர்கள் பூர்ஷ்வா சமுதாயத்தின் நெறிகளை மீறி, ஆணாதிக்கக் குடும்பத்தின் விழுமியங்களுக்கு எதிராக தங்களுக்கான ஒரு புதிய அடையாளத்தை அறுதியிட்டுக் கொண்டு, வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்ததைக் கடந்து பொது வெளியில் செயலாற்றினர். 'பாரிஸின் பாதுகாப்புக்கும் காயமடைந்தோரை கவனித்துக் கொள்வதற்குமான பெண்கள் சங்கம்', முதல் அகிலத்தில் உறுப்பினராக இருந்த எலிஸபெத் திமிதெரியேஃபின் (Elisabeth Dmitrieff) ஓய்வொழிச்சலற்ற செயல் பாட்டிற்குப் பெரிதும் கடன்பட்டிருந்தது. இந்த சங்கம் நீண்ட காலம் நடத்த வேண்டியிருந்த சமூகப் போராட்டங்களை அடையாளப் படுத்துவதில் மையப் பாத்திரம் வகித்தது. கம்யூன் பெண்கள், உரிமங்கள் பெற்று நடத்தப்பட்டு வந்த விலைமாதர் விடுதிகளை இழுத்து மூடுவதை சாதித்தனர்; பெண் ஆசிரியர்கள் ஆண் ஆசிரியர்களுடன் எல்லாவகையிலும் சமத்துவம் பெற வைத்தனர்; "சரிசமமான வேலைக்கு சரிசமமான ஊதியம்" என்ற முழக்கத்தை எழுப்பினர்; திருமணமானவர்களில் கணவருக்கும் மனைவிக்கும் சம உரிமைகள், ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்வதற்கான அங்கீகாரம் ஆகியவற்றைக் கோரினர்; தொழிற்சங்கங்களில் பெண்களுக்கன பிரத்யேகமான தனிப் பிரிவுகளை ஊக்குவித்தனர். மே மாத நடுப்பகுதியில் வெர்ஸேய் துருப்புகள் பாரிஸ் நகர வாயிலுக்கு வந்துவிட்டதால் கம்யூனின் இராணுவ நிலைமை மோசமாகிவிட்ட போது, பெண்கள் ஆயுதங்கள் ஏந்தி பெண்கள் படைப்பிரிவொன்றை உருவாக்கினர். அவர்களில் பலர் தடைச்சுவர்களில் தங்கள் இறுதி மூச்சை விட்டனர். பூர்ஷ்வா பரப்புரைகள், அந்த பெண்களை மிக நச்சுத்தனமான தாக்குதலுக்கு இலக்காக்கின; அவர்களை 'வேசிகள்' என்றும், தெருச் சண்டைகளின் போது பாரிஸ் நகரத்தை தீயிட்டுக் கொளுத்தியவர்கள் என்றும் குற்றம் சாட்டின.

அதிகாரத்தை மையப்படுத்துவதா அல்லது பரவலாக்குவதா?

கம்யூனார்டுகள் நிறுவ முனைந்த உண்மையான ஜனநாயகம் என்பது அவர்கள் மிகவும் விரும்பிய, ஆனால் சாதிப்பதற்குக் கடினமான ஒரு திட்டமாக இருந்தது. மக்களின் இறையாண்மையை நிறுவுவதற்கு மிகப்பெரும் எண்ணிக்கையிலான குடிமக்களின் பங்கேற்பு தேவைப் பட்டது. மார்ச் மாத இறுதியிலிருந்து பாரிஸில் மத்திய அவைகள், வட்டாரத் துணைக் குழுக்கள், புரட்சிகர மன்றங்கள், படைவீரர்களின் பட்டாளங்கள் ஆகியன காளான்கள் போல முளைத்து, கம்யூன் அவை,

தேசியக் காவலர் படை ஆகிய இரு அமைப்புகள் செயல்படுத்திய சிக்கலான இருதலைப்பட்ட அதிகார நிலைகளுடன் தம்மை இணைத்துக் கொண்டன.

தேசியக் காவலர்கள் அமைப்பு இராணுவத்தின் மீதான கட்டுப்பாட்டைத் தன்னிடம் தக்கவைத்துக் கொண்டு இருந்ததோடு, பல சமயங்களில் கம்யூன் அவையின் எதிர்- சக்தியாகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. மக்களின் நேரடியான பங்கேற்பு, ஜனநாயகத்துக்கான முற்றிலும் அவசியமான உத்தரவாதமாக இருந்தபோதிலும், பல்வேறு அதிகார அமைப்புகளின் பங்கேற்பு, முடிவுகளை மேற்கொள்ளும் நிகழ்முறையை மிகவும் கடினமாக்கியது. இதன் காரணமாக கம்யூனின் ஆணைகளை நடைமுறைப்படுத்துவது மிகவும் சிக்கலான விஷயமாகியது.

அதிகார மையத்துக்கும் வட்டார அமைப்புகளுக்குமான உறவு என்ற பிரச்சினை மிகவும் குழப்பமான, சில சமயங்களில் கம்யூனின் பணியை முடக்குகின்ற நிலைமைகளுக்கு இட்டுச் சென்றது. அதிகார மையத்துக்கும் வட்டார அமைப்புகளுக்குமிடையே இருந்த நுண்ணிய சமநிலை பின்வரும் காரணங்களால் உடைந்து நொறுங்கியது: போர் உருவாக்கிய நெருக்கடி நிலை, தேசியக் காவலர்கள் அமைப்பில் ஏற்பட்ட ஒழுங்குச் சீர்குலைவு, கம்யூன் அரசாங்கத்தால் விரும்பப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் அடுத்தடுத்து வந்த தோல்வி. இவற்றின் காரணமாக, 1793இல் மேக்ஸ்மிலியன் ரோப்பெஸ்பியெர் உருவாக்கிய சர்வாதிகார முன்மாதிரியை ஒத்த, ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட 'பொதுப் பாதுகாப்புக் குழு'வை (Public Defence Committee) உருவாக்க வேண்டும் என்ற ஆலோசனையை ஜூல் மியோ (Jules Miot) முன்மொழிந்தார். இந்த ஆலோசனை மே மாதம் முதல் நாள் கம்யூன் அவையில் பெரும்பான்மை வாக்குகள் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு ஆதரவாக 45 வாக்குகளும் எதிராக 23 வாக்குகளும் விழுந்தன. மிகப் பெரும் தவறு என்று நிரூபிக்கப்பட்ட இந்த முடிவு, புத்தம் புதியதோர் அரசியல் பரிசோதனையின் முடிவின் தொடக்கமாக அமைந்து கம்யூனை ஒன்றையொன்று எதிர்க்கும் இரு அணிகளாக்கியது. நவ-ஜேகோபின்களும் பிளாங்கியிஸ்டுகளுமடங்கிய முதல் அணி, அதிகாரக் குவியலின் பக்கம் சாய்ந்தது; இறுதியில் கம்யூனின் சமூக பரிமாணத்தைக் காட்டிலும் அரசியலுக்கு முதன்மை கொடுத்தது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் உள்ளிட்ட இரண்டாவது அணி, சமூகத் தளம்தான் அரசியல் தளத்தைவிட மேலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதியது. அதிகாரங்கள் பிரிக்கப்படுவது அவசியமானது என்று கூறிய

அந்த அணி, கம்யூன் குடியரசு ஒருபோதும் அரசியல் சுதந்திரங்களைக் கேள்விக்குட்படுத்தக்கூடாது என்றது. அசைக்கமுடியாத தீரரான யூஜின் வார்லேனால் (Eugène Varlin) ஒருங்கிணைக்கப்பட்ட அந்த அணி, அதிகாரத்துவ திசையை நோக்கிய சறுக்கலைக் கூர்மையாக நிராகரித்தது; 'பொதுப் பாதுகாப்புக் குழுவு'க்கான தேர்தலில் அது பங்கேற்கவில்லை. ஒரு சிலர் கைகளில் அதிகாரத்தைக் குவிப்பது, கம்யூன் எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் நிறுவப்பட்டதோ அவற்றுடன் அப்பட்டமாக முரண்படுவதாகும் என்றும் அதற்குக் காரணம் இறையாண்மை என்பது கம்யூனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அல்ல, மக்களுக்குத்தான் அது உரியது என்றும், அதை ஒரு குறிப்பிட்ட அமைப்பிடம் கையளித்துவிட முடியாது என்றும் அது கருதியது. இந்த சிறுபான்மை அணி மே 21 அன்று கம்யூன் அவை அமர்வில் பங்கேற்ற போது, அவை உறுப்பினர்களிடையே ஒற்றுமையை உண்டாக்கும் ஒரு புதிய முயற்சி செய்யப்பட்டது. ஆனால் ஏற்கெனவே அது மிகவும் தாமதமாக செய்யப்பட்டதாகிவிட்டது.

புரட்சியும் கம்யூனும்: ஒரே அர்த்தம்

பாரிஸ் கம்யூன் வெர்ஸேய் இராணுவங்களால் மூர்க்கத்தனமாக நசுக்கப்பட்டது. 'இரத்த வாரம்' (semainesanglante) எனச் சொல்லப்படும் மே 21 முதல் 28 வரையிலான நாட்களில் படுகொலை செய்யப்பட்ட குடிமக்களின் எண்ணிக்கை 17000 முதல் 25000 வரையிலாகும். கடைசிப் படுகொலைகள் பெர் லாஷேஸ் (Père Lachaise) கல்லறைத் தோட்ட சுவர்களையொட்டி நடந்தன. இளம் கவிஞர் ஆர்தர் ரம்போ[17], பிரெஞ்சுத் தலைநகரை "துக்கம் தோய்ந்த, கிட்டத்தட்ட இறந்து போன நகரம்" என்று வர்ணித்தார். பிரெஞ்சு நாட்டின் வரலாற்றில் அதுதான் மிகப் பெரிய, இரத்தவெறி பிடித்த படுகொலையாகும். 6000 பேரால் மட்டுமே தப்பிச் சென்று இங்கிலாந்து, பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் தஞ்சம் புக முடிந்தது. 43,522 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இராணுவ நீதிமன்றங்களால் உடனடி விசாரணைக்குட் படுத்தப்பட்ட நூறு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 13500 பேர் சிறைக்கு அனுப்பப்பட்டனர் அல்லது நியூ காலடோனியா போன்ற தொலை தூர இடங்களுக்கு நாடு கடத்தப்பட்டனர். அங்கு சென்றவர்களில் சிலர் காலனிய எதிர்ப்பு மோக்ரானி கிளர்ச்சியின்[18]

---

[17] **ஆர்தர் ரம்போ (Arthur Rimbaud-1854-1891):** பிரெஞ்சுக் கவிஞர். சர்ரியலிசக் கவிதைகளை எழுதுவதில் முன்னோடியாக இருந்தவர்.

[18] **மொக்ரானி கிளர்ச்சி (Mokrani Revolt):** 1830இல் அல்ஜீரியா மிது படையெடுத்து அதைத் தனது காலனியாக்கிக் கொண்ட பிரெஞ்சு காலனியவாதிகளுக்கு எதிராக 1871ஆம் ஆண்டில் அல்ஜீரியாவில் 250 பழங்குடியினர் ஒன்றிணைந்து நடத்திய →

அல்ஜீரியத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து அவர்களுக்கு ஏற்பட்ட முடிவைப் பகிர்ந்து கொண்டனர். கம்யூன் தோன்றிய அதே காலத்தில் தான் அந்த அல்ஜீரியக் கிளர்ச்சியும் வெடித்தது. கம்யூனைப் போலவே அதுவும் பிரெஞ்சுத் துருப்புகளால் இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

கம்யூன் என்ற "பேய்" ஐரோப்பா முழுவதிலும் சோசலிச-விரோத ஒடுக்குமுறைகளை ஆழப்படுத்தியது. தியெரின் அரசு நடத்திய முன்னுவமையற்ற வன்முறையைப் பொருட்படுத்தாத பழைமைவாத, தாராளவாதப் பத்திரிகைகள் மிக மோசமான குற்றங்களை இழைத்ததாக கம்யூனார்டுகள் மீது குற்றம் சாட்டியதுடன், "இயற்கையான ஒழுங்கமைப்பு"ம் பூர்ஷ்வா சட்டத்தைப் பின்பற்றும் பண்பும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டதற்காக நிம்மதிப் பெருமூச்சுவிட்டன. அதிகாரத்தை மதிக்காத ஒழுங்குச் சீர்குலைவின் மீது "நாகரிகம்" பெற்ற வெற்றியைக் குறித்த தங்கள் திருப்தியை வெளிப்படுத்தின. அதிகாரத்தை மீறி, ஆளும் வர்க்கங்களின் சிறப்புரிமைகள் மீது தாக்குதல் தொடுக்கத் துணிந்தவர்கள், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கக்கூடிய தண்டனை வழங்கப் பெற்றனர். பெண்கள் மீண்டும் தாழ்ந்த பிறவிகளாக நடத்தப்பட்டனர்; எவ்வித பாவனைகளுமின்றி, பகிரங்கமாக ஆளத் துணிந்தவர்களும் அழுக்குப் படிந்த, கெட்டித் தோல் கொண்ட கைகளைக் கொண்டவர்களுமான தொழிலாளிகள் அவர்களுக்கு எந்தத் தகுதிகள் உண்டு என்று கருதப்பட்டதோ அவற்றுக்குத் திரும்பவும் விரட்டியடிக்கப்பட்டனர். எனினும், பாரிஸில் ஆளும் வர்க்கத்துக்கு எதிராக எழுந்த ஆயுதமேந்திய கிளர்ச்சி தொழிலாளர் போராட்டங்களுக்கு வலுவூட்டி, மேலும் தீவிரமான திசைகளில் அவர்களை உந்தித் தள்ளியது. பாரிஸ் கம்யூன் தோற்கடிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின், யூஜின் பாத்தியெ (Eugene Pottier), தொழிலாளர் இயக்கத்தில் மிகவும் போற்றப்படவிருந்த பாடலை[19], "நாம் ஒன்றிணைவோம். நாளை சர்வதேசத் தொழிலாளர் சங்கம் மனித இனமாக விளங்கும்"

← கிளர்ச்சி. அதற்குத் தலைமை தாங்கியவர்களில் முக்கியமானவர்கள் சேக் மொக்ரானி, பௌமஸராக் மொக்ரானி என்ற இரு சகோதரர்கள். எனவே அந்தக் கிளர்ச்சி மொக்ரானி கிளர்ச்சி என அழைக்கப்பட்டது.

[19] மானுட வரலாற்றில் காணப்படும் போராட்டப் பாடல்களில் முன்னுவமை இல்லாததும் உலக நாடுகள் கிட்டத்தட்ட அனைத்திலும் நூற்றுக்கணக்கான மொழிகளில் பாடப்பட்டுள்ளதும், பாடப்பட்டுவருவதுமான பாடலே 'சர்வதேச கீதம்'. பாரிஸ் கம்யூன் 1871 ஜூன் மாதம் நசுக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகே அது எழுதப்பட்டது. முதலாம் அகிலம் (First International) எனச் சொல்லப்படும் 'முதல் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை'க் (International Working Men's Association:1864-76) குறிப்பிடுவதுதான் 'Internationale' என்னும் கவிதை. யூஜின் பாத்தியெவின் மூலக் கவிதையை marxists.org என்னும் இணையதளத்திற்காக வரிக்கு வரி அப்படியே ஆங்கிலத்தில் மொழியாக்கம் →

என்ற வரிகளுடன் தொடங்கும் பாடலை இயற்றினார். முதலாளியத்திலிருந்து புரட்சிகரமாக வேறுபடும் சமுதாயத்தைக் கட்டுவதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை பாரிஸ் கம்யூன் காட்டியது. கம்யூன் உறுப்பினர் ழான் பேப்டிஸ்ட் க்ளமோவின் (Jean-Baptiste Clément) *பாடலில் வருவது போன்ற 'செர்ரி பழங்களின் காலம்' கம்யூனைத் தோற்றுவித்தவர்களுக்கு ஒருபோதும் திரும்பக் கிடைக்கவில்லை என்றாலும், சமுதாய-அரசியல் மாற்றம் பற்றிய கருத்து, அந்தக் கருத்தின் நடைமுறையாக்கம் ஆகியவற்றின் உருத்தோற்றமாக பாரிஸ் கம்யூன் விளங்கியது. கம்யூன் என்ற சொல் புரட்சி என்ற கருத்தாக்கத்துக்கும், தொழிலாளிவர்க்கத்தின் வாழ்வனுபவங்களுக்கும் இணையானதாகியது. 'பிரான்ஸில் உள்நாட்டுப் போர்' என்ற உரையில் கார்ல் மார்க்ஸ், "நவீனப் பாட்டாளிவர்க்கத்தின் இந்த முன்னணிப் படை, உலகத் தொழிலாளர்களை பிரான்ஸுடன் இணைப்பதில் வெற்றி கண்டிருந்தது" என்று கூறினார். பாரிஸ் கம்யூன் தொழிலாளிகளின் உணர்வையும் அவர்களது ஒட்டுமொத்தப் புரிதலையும் மாற்றியது. 150 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் செங்கொடி தொடர்ந்து பறந்து கொண்டிருப்பதுடன் ஒரு மாற்று எப்போதுமே சாத்தியமானது என்பதை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. கம்யூன் நீடூழி வாழ்க!*

★★★

← *செய்துள்ள மிட்செல் அபிடோர் கூறுகிறார்: ஒடுக்குமுறையாளர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பாத்தியெ, அவர்களின் கண்ணுக்குத் தென்படாமல் தலைமறைவாக இருந்து கொண்டு, இலண்டனுக்குத் தப்பிச் செல்ல முயன்று கொண்டிருந்த நாட்களில் எழுதப்பட்ட கவிதைதான் அது. 1887 ஆம் ஆண்டு வெளிவந்த அவரது கவிதைத் தொகுப்பான 'புரட்சிப் பாடல்கள்' என்னும் தொகுப்பில் இடம் பெற்றிருந்த அந்தக் கவிதை கம்யூன் உறுப்பினரான லெஃப்ரான்ஸெ* (Lefrancaise) *என்பவருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அந்தக் கவிதை எழுதப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு அதைப் பாட்டாகப் பாடும் வண்ணம் அதற்கான மெட்டு பியெர் டெகெடெர்* (Pierre Degeyter) *என்னும் மற்றொரு பிரெஞ்சுக்காரரால் அமைக்கப்பட்டது. ஆனால், அது சர்வதேசத் தொழிலாளர் அமைப்புகளிடையே உடனடியாகப் பிரபல்யம் அடையவில்லை. 1887இல் ஸ்விஸ் நகரமான ஜூரிக்கில் எங்கெல்ஸ் கலந்துகொண்ட சர்வதேசத் தொழிலாளர் காங்கிரஸில் அந்த மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள், அந்தக் காலத்தில் புரட்சிப் பாடலாகக் கருதப்பட்டு வந்த மார்ஸெ* (Merseillaise) *என்பதைத்தான் பாடினர். அது பிரெஞ்சுப் பூர்ஷ்வா வர்க்கப் புரட்சியின் பாடல். பிரெஞ்சு சோசலிஸ்ட் கட்சியில் இருந்த ஜூல் கெஸ்டே* (Jules Guesde) *என்னும் தலைவரின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள்தான் முதன்முதலாக அதை சோசலிஸ்டுகளின் பாடலாக ஏற்றுக்கொண்டனர் என்றும், 1900ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற சர்வதேச சோசலிஸ்ட் காங்கிரஸில் அதனை முதன் முதலாக இசைக்கச் செய்தனர் என்றும் மிகெய்ல் வினோக்* (Michael Winock) *என்னும் பிரெஞ்சு வரலாற்றாசிரியர் கூறுகிறார் (https://www.marxists.org/history/ussr/sounds/lyrics/international.htm)*

நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை

புரட்சியை நடத்தும் பொறுப்பைப் பாரிஸ் கம்யூன் தன் சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டபோது; சாமானிய உழைக்கும் மனிதர்கள் தங்களுக்கு "இயற்கையிலேயே மேலானவர்கள்" என்று சொல்லப்பட்டவர்களின் அரசாங்க சிறப்புரிமைகளை முதல் முறையாக மீறத் துணிந்தபோது, முன்னுவமை இல்லாத கடினமான சூழ்நிலைமைகளில், ஒரு பெருநகரப் பள்ளிக்கூட நிர்வாகிகளின் செயலாளருக்குக் குறைந்தபட்சமாகத் தேவைப்படுவதில் ஐந்தில் ஒரு பங்கு ஊதியத்தையே தங்களுக்கான மிக அதிகபட்சமான ஊதியமாகப் பெற்று செயலாற்றிய போது, உழைப்பாளர் குடியரசின் சின்னமான செங்கொடி, ஹோட்டல் தெ வில்லில் பறந்து கொண்டிருப்பதைக் கண்டு பழைய உலகம் வெஞ்சின வலிப்புகளால் பதைபதைத்துக் கொண்டிருந்தது.

- கார்ல் மார்க்ஸ்

(பிரான்ஸில் உள்நாட்டுப் போர் பற்றி சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் மே, 1871இல் ஆற்றிய மூன்றாவது உரையிலிருந்து)

Scan Me

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in